# 1. மொழிபெயர்ப்புகள்

## மொழிபெயர்ப்புக் குழு

**குழு அங்கத்தவர்கள் :**

1. A.Raheem
2. A.Rahman
3. N.M.Inshiraf
4. M.Misbah
5. A.I.F.Naaila
6. M.H.Husna
7. M.F.F.Zahidah
8. W.F.Fazna
9. F.Shamla

குழுத் தலைவி : A.I.F. Naaila

உப தலைவர் : Abdhur Raheem

எமது குழுவுக்கு தரப்பட்ட செயற்திட்டங்கள் :

1. புத்தகங்கள் மொழிபெயர்த்தல்
2. Videos மொழிபெயர்த்தல்
3. Articles மொழிபெயர்த்தல்

2018.02.01ம் திகதி முதல் 2018.12.03ம் திகதி வரையான காலப்பகுதியில் எமது மொழிபெயர்ப்புக்குழு மூலம் செய்து முடிக்கப்பட்ட வேலைகள்.

- **மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்கள் ;**

**1.** கிராஅதுன் பீ வாகிஇல் உம்மா பில் பித்ரதில் அஹீரா

என்ற கலாநிதி யூசுப் கர்ளாவியின் அரபு மொழியிலான புத்தகம் ‘‘**கடந்த தசாப்தங்களில் இஸ்லாமிய உம்மத்தின் நிலை**’’ என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டது.

2017.11.29ம் திகதி அன்று ஆரம்பிக்கப்பட்டு 2018.10.28ம் திகதி மொழிபெயர்த்து முடிக்கப்பட்டது.

சகோதரர் ஸுனூமி ஸெய்ன் (இர்பானி) அவர்கள் கடந்த 2018.10.10 அன்று 3 புத்தகங்களைவெளியிட்டார்.இவ்வெளியீட்டு வைபவமானது பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 3 புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

- வெற்றிகரமான கற்பித்தலுக்கு 33 வழிமுறைகள்
- இறையச்சமும் அதன் முக்கியத்துவமும் பிரதிபலன்களும்
- முற்றத்து மல்லிகைகள்

**2.வெற்றிகரமான கற்பித்தலுக்கு 33 வழிமுறைகள்** என்ற புத்தகமானது ஸலாஸூன் வஸலாஸூன ஹுத்வதுன் லிதுரீஸின் நாஜிஹ் என்ற அரபு மொழிப்புத்தகத்தின் தமிழாக்கமாகும். இதன் ஆசிரியராக ராசித் பின் ஹுஸைன் பின் அப்துல் கரீம் காணப்படுகிறார். இது 50 பக்கங்களை கொண்டது.

**3.இறையச்சமும் அதன் முக்கியத்துவமும் பிரதிபலன்களும்**

கலாநிதி ஸாலிஹ் பின் இப்றாஹீம் என்பவரது அத்தக்வா...... என்ற அறபு மொழிப் புத்தகத்தின் தமிழாக்கம் இதுவாகும். இது 31 பக்கங்களை கொண்டதாகும்.

- **மொழிபெயர்க்கப்பட்ட Videos**

1. **Do you want to be happy, be patient** என்ற ஆங்கிலமொழி மூலமான உலகறிந்த பேச்சாளர் முப்தி மென்கின் காணொளி '**பொறுமையாக இருங்கள்**' என்ற தலைப்பில் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

   2018.09.12 அன்று இக்காணொளி மொழிபெயர்க்க ஆரம்பிக்கப்பட்டு 2018.09.20ம் திகதி நிறைவுபெற்றது.

2. **Advices to sisters** என்ற ஆங்கிலமொழி மூலமான உலகறிந்த பேச்சாளர் முப்தி மென்கின் காணொளி "**சகோதரிகளுக்கு ஓர் உபதேசம்**" என்ற தலைப்பில் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

   2018.09.12 அன்று இக்காணொளி மொழிபெயர்க்க ஆரம்பிக்கப்பட்டு 2018.09.20ம் திகதி நிறைவுபெற்றது.

- **மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகள் :**

1. **" மிஅது ஸுஆல் அனில் இஸ்லாம் "** என்ற இமாம் கஸ்ஸாலியின் அரபு மொழிப்புத்தகத்தில் இருந்து "**ஹல் பீ இஸ்திதாஅதில் இஸ்லாம் ஐ யுகத்திம ஹுலூாலன் லில்முஷ்கிலாதில் குப்ரா அல்லதி தஆனி மின்ஹா அல்இன்ஸானிய்யதுல் யவ்ம்? "** என்ற கட்டுரை "**மனித குலம் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் ஆற்றல் இஸ்லாத்துக்கு உள்ளதா? "** என்ற தலைப்பில் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

**2.** அஷ்ஷெய்ஹ் S.M.M. மஸாஹிர் (நளீமி) அவர்களால் இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகையில் எழுதப்பட்ட **" பாரபட்சம் காட்டியுள்ளதா? "** என்ற தலைப்பிலான கட்டுரை சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. இக்கட்டுரை 2018.10.25 அன்று மொழிபெயர்க்க ஆரம்பிக்கப்பட்டு 2018.11.15 அன்று மொழிபெயர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

**3.** மர்யம் ஜமீலா பேகம் அவர்களால் அரபு மொழியில் எழுதப்பட்ட கட்டுரை இஸ்லாமிய சிந்தனை சஞ்சிகையில் **"இஸ்லாமும் மன ஆரோக்கியமும்"** என்ற தலைப்பில் எம்.எச்.எம். ஹிபதுல்லாஹ் என்பவரால் தமிழில் எழுதப்பட்டுள்ளது. குறித்த தலைப்பிலான கட்டுரை சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. இக்கட்டுரை 2018.10.25 அன்று மொழிபெயர்க்க ஆரம்பிக்கப்பட்டு 2018.11.23 அன்று மொழிபெயர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டது.

- **மொழிபெயர்க்கப்பட்ட WhatsApp Article** :

Whatsappல் எழுதப்பட்ட **அழகிய வரிகள்** என்ற ஆக்கமொன்று ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது.



